நிலையம் அமைக்க வேண்டும் என்பது அந்தப் பகுதிப் பொது மக்கள், விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு அந்தப் பகுதியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளதாகவும், வாரிய அனுமதி கிடைத்தபின், தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின், பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், அந்தத் துணை மின் நிலையத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவதுடன், அந்தப் பணி உத்தேசமாக எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 15 கோடி ரூபாய் செலவாகும். 2008–2009 ஆம் ஆண்டில் இந்தத் துணை மின் நிலையப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

நியாய விலையில் உணவுப் பொருட்கள் விநியோகம், தமிழ்ப் புத்தாண்டு நாளான 14–4–2007 முதல் தொடங்குதல்– மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று, (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். (குறுக்கீடுகள்) பின்னர் எடுக்கப்படும், உட்காருங்கள்.

பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில்

2007 ஏப்ரல் 4] [கலைஞர் மு. கருணாநிதி]

"பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைத்து, இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, கடந்த பத்து மாதங்களாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இதுபோன்றே, பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, ஏழை, நடுத்தரக் குடும்பங்களைப் பாதுகாக்கும் உடனடித் தற்காலிக நடவடிக்கையாக, அப்பொருட்களை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பையொட்டி, தற்போது பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா ஆகிய உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள்மூலமாக விநியோகம் செய்யும் திட்டம் தமிழ்ப் புத்தாண்டு நாளான *14-4-2007* அன்று *(மேசையைத் தட்டும் ஒலி)* சென்னை மாநகரத்திலே தொடங்கப்பட்டு, இத்திட்டம் படிப்படியாக மே மாதம் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலே உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-40

3. அறிவிப்புகள்

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் அமெரிக்கத் தூதர் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் சார். நான் கூப்பிட்டால்தானே? *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் முதலிலே. நான் கூப்பிடுகிறேன். இதை முடித்துவிட்டு நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் Thiru. David T. Hopper மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்கள் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து,